பின்பு பால்விட்டு அரைக்கவும். நல்லெண்ணெய் படி-1, அந்தச் சாறு வகைக்குப் படி - 2, பால் படி-1, அரைத்த மிளகை அதில் போட்டு காய்ச்சி பதத்திலிறக்கி முழுகவும். பீனிசமெல்லாந் தீரும். கை கண்டது. எருக்கிலைப்போல சீலையா அட்டி புண்ணு மேலெ போடவும். சிறு பீளைத் திரையை வறுத்துக் கட்ட ககப்புத்துத் தீரும்.

2. ~~வகுத்துக் கடுப்பு~~ வயிற்றுக் கடுப்பு, காசினோவுக்கு ரத்தக்கடுப்பு விஷபாகம், நீர்க்கோவை பாண்டு, வாய்வு.

பச்சை அரிசி அரைச்சு, வாழைப்பழமும் வெண்ணெயுஞ் சேர்த்துத் தின்ன ~~வகுத்துக் கடுப்பு~~ வயிற்றுக்கடுப்பு உடனே நிற்க கை கண்டது. காசினோவு தேளும், காட்டுப் பன்றி நெய்யும் காசிடை கொள்ளத் தீரும். பாலை வேர் இரண்டு படி தண்ணீர் விட்டு உழக்காய் காய்ச்சி, பலமும்பின் வாகனிடை மேல்பொடி போட்டுக் குடிக்க இதுக்கு தீரும் வியாதி விஷபாகம், நீர்க்கோவை, பாண்டு, சோகை, அசீரண, கவுனை, மகோதிரம், இந்நோய்கள் தீரும். கை கண்டது.

வயிற்று வலி!

சுக்கு பலம் - ௧(½), மிளகு பலம் - ௧ ½, வெள்ளைவெங்காயம் பலம் - ௧, ஓமம் பலம் - ௧, கல்லுப்பு பலம் - ௧, இதுவெல்லாம் இளவறுப்பாய் வறுத்து ஒரு பலம் கெந்தகம் கூட்டி இடிச்சு மாயிடித்து சக்கரையும் கூட இடிச்சு வெல்லம் பாகு பண்ணி அதில் போட்டுக் கிளறி உண்டை பண்ணி இரண்டு நேரம் கொள்ள சகல வயிற்று வலியுந் தீரும். பத்தியம்.

5. ~~கிராணிக்கு~~ நீர் கட்டுக்கு;—

ஆலம்பட்டை, அத்திப்பட்டை, நாவல்ப்பட்டை, மாம்பட்டை, மிராமரத்துப் பட்டை, அரசமரத்துப்பட்டை, கிளுவைன் பட்டை, வகைக்கு பலம் 5 நன்றாய்த் தாள் பண்ணி பானையிலப் போட்டு இரெண்டு தண்ணீர்வார்த்து நாழியாகக் காய்ச்சி அதில் சாதிக்காய் விராகன் -1, சாதிபத்திரி விராகன் -1, கிராம்பு விராகன் -1, கஞ்சா புடம்பண்ணி கஞ்சா விராகன் -1, கிரோசாணி ஓமம் விராகன் -1, ஏலம், லவங்கம், அந்த கஷாயத்தில் போட்டு தினசரிக் கலிபதமா யரைக்கி ஆறுவிராய காயிடை பிரமாணம் உண்டை செய்து வாழைக்காயில் திணிக்கவும். காரைத்தை வெவிச்சு தின்னவும். உடனே நிற்கும். கைகண்டது. ~~செப~~

பெருங்காயம் விராகன் -1, யாது வெல்லத்தில் அப்பா கட்டிக் கொடுக்க. உடனே நீர் வரும், இளநீரில் எட்டிக் காய் அரைத்துக் கலக்கி வாங்கி. பெருங்காயம் சேர்த்துக் கொடுக்க நீர் வரும்.

ஒரு பிடி அரிசியைச் சட்டியிலப் போட்டு கருக்கி
அ. கொட்டிப் போட்டு பின்சேனை உப்பு கரிக்கிக் கொட்டி போட்டு அந்த சட்டியைத் தண்ணீர் விட்டு, சுக்கு, திப்பிலி, பச்சோளை, அதிலப் போட்டு காய்ச்சிக் கொடுக்க நீர் வரும். கைகண்டது.

~~வித்தை வாக்கி~~ வயிற்று வலிக்கு கிலிக்கொண்டிச் சூரணம்!

பெருங்காயம் விராகனிடை -1, வசம்புக்கு ~~சாக~~ சாம்பல் விராகனிடை -2 கொத்தமல்லி விதை விராகன் -2, சுக்கு விராகன் -4. திப்பிலி விராக்கன் 4, ஏலம் விராகன் -4, கடுக்காய் விராகன் -6.

ஓமம் விராகன் - 5, கோஷ்டம் விராகன் - 8,
சிவதை விராகன் - 9, யாவையெல்லாம் சூரணம் பண்ணி
தேனில், பசுவின் நெய்யால் சர்க்கரையால் கொள்ள
சகல ~~வெகுத்த வலியும்~~ வயாற்று வலியும், நெஞ்சு வலியும் தீரும். பக்க
வலியும், மேகோதிரமும் தீரும்.

சலம் விட:

சுக்கு, இந்துப்பு, பச்சோலை அதில் போட்டு
காய்ச்சிக் குடிக்க நீர் விடும். புத்தோடு கொண்டைவந்து
கட்டிப் பொடிபண்ணி ஒருபடி தண்ணீர் விட்டு வற்றக்
காய்ச்சி ஆறவைத்து அதை யாருத்துக் குடிக்க சலம்
விடும்.

6. நீர்க்கோவை, சுரத்தின் மேல் கபக்கட்டு. சன்னி முதல், தொந்த இருமல்!:-
பேசாத்தாற்றி, ஈ.ளை இருமல், சேற்றும் இருமல்

கொடிவேலி வேர் பட்டை, செந்நாயுருவி, சங்கம் வேர்
யாது மூன்றும் பெரும் வெள்ளாட்டுக் கோமியத்திலரைத்து
குடிக்க நீர்க்கோவை இறங்கும். பொரசன் பட்டை
மூளைகறணை வேர் அரைத்து உள்ளுக்கு கொடுத்து மேலும்
பூசவும். ஈ.ளை இருமல், சேற்றும் இருமல், வறட்சி
இருமல்:- ஆடாதோடை, கண்டங் கத்தரி, பிரண்டை,
நொச்சி யாவத்த நாலு வகையும் தண்ணீர் விட்டுத் தூதுவேளை
சாறு பிழிந்து அண்டாக் காய்ச்சி பதமானால் அதில்
மருந்து வெங்காரம் விராகன் - 4, சீனி பொரிச்சு
போடவும். மிளகு பலம் - 2, திப்பிலி பலம் - 2 இந்த
மூன்றும் பொடிபண்ணிப் போட்டுத் தூளாவி காய்ச்சி
நெல்லிக்காயளவு கொள்ளவும். இருமல் தீரும்
கை கண்ட ____ து.

மேகம் இருபது, கைகாலெரிவுக்கு, பயித்திய வெட்டைக்கு

பேரீச்சம் பழம், நெல்லிப்பருப்பு, சாதிக்காய், கற்பூர சிலாசத்து, திப்பிலி, ஏலம், அதிமதுரம், சிறுபீளைவேர், சந்தனச் சிராய், வெள்ளரிவிதை, கொத்தமல்லிவிதை விராகன் -5, லவங்கம், நிலப்பனைக் கிழங்கு, வராகன் -1, சக்கரை விராகன் -2, ஆலம்பட்டை, பலம் -2, பச்சை அரிசி கஞ்சியில் ஒரு வள்ளம் ஆவாரம் பட்டையை அரைத்து எலுமிச்சங்காய், எலுமிச்சங்காய் அளவு அரைத்து கஞ்சியில் கலக்கிக் காய்ச்சி கால்வாசி சுண்டுகையில் பிறகு சக்கரை போட்டுக் காய்ச்சி பிறகு சூரணம் லேகியம் பதத்தில் இறக்கிக் கொள்ளவும். இரண்டு நேரமும் நெல்லிக்காயளவு சாப்பிட சகல வெட்டை உஷ்ணமும் தீரும். கை கண்டது.

பீனை யாருமல், மந்தார காசத்துக்கு:-

வெள்ளருகு, உசிலம் பட்டை, பறங்கிப் பட்டை, வகைக்குப் பலம் -1, நசுக்கி யாடி சூரணம், வெருகடி பிரமாணம் பசுவின் பாலில் கொள்ள இருமல், மந்தார காசம், இருமல் தீரும். கை கண்டது.

7. தலைவலி, கண்வலி, கிரிபுகை:

மஞ்சள் விராகன் -1, கஸ்கஸாகிலாயம் விராகன் -1, மிளகு விராகன் - இது மூன்றும் பொடிசெய்து சீலையில் திரிச்சு புகை பிடிக்க தலை வலி, கண்வலி இது இரண்டும் தீரும்.

வாய்வுக்கு:

சீரகம் விராகன் -2, இந்துப்பு விராகன் -2, ஓமம் விராகன் -3, சுக்கு விராகன் -5, திப்பிலி விராகன் -4, மிளகு விராகன் -2. கடுக்காய்

விராகன் - 15 இதுவெல்லாம் வைத்து பொடித்து வஸ்திரகாயம் பண்ணிக் கொண்டு இரண்டுவேளை வெண்ணெயில் கொள்ள சகல வாய்வுந் தீரும். கை கண்டது.

வீக்கத்துக்கு:

பெருங்காயம் எருக்கன் பாலில் அரைத்து வீக்கத்துக்கு மேல் பூச வீக்கம் கரையும். உத்தமம்.

அ. சீதவாதத்துக்கு மோர்த்தண்டன் குளிகை:

அதிமதுரம், திப்பிலி, கடுரோகணி, வெங்காரம் இதுவெல்லாம் வகைக்கு விராகன் - 3 இரண்டு பாகு, கொங்காணம் கூட்டி வேப்பன் பட்டைச் சாறு விட்டரைத்து உழுந்து பிரமாணம் உண்டை செய்து ஒரு உண்டை சீரகம் பொடியால் தீக்க சுரமுந் தீரும்.

பாண்டு, காமாலைக் குன்மத்துக்கு:

பாண்டு, காமாலை, பெருவயறு. புளியாரைக் கிழாய்க்கு, சித்திர மூலம், முள் மஞ்சிவேர், பிரண்டை வேர், யாது தனியத்தனிய மோரில் கொள்ளத் தீரும் வியாதி மேகக்கிராணி, பாண்டு, காமாலை, குன்மம், பெருவயிறு யாதுவெல்லாம் தீரும். யாது கைகண்டது.

ஈ. இரத்த மூலத்து சூதக வாய்வுக்கு:

கற்பூர சிலாசத்து வகைக்கு விராகன் - 4 அரைச்சு கரைத்து பதத்தில் வடித்து கொள்ள கிரைப்பு, வெகு மூத்திரமுந் தீரும். நாயுருவி, பாளை, சீரகம், காரெள்ளு, அசமதாகம், பசுவின் நெய்யால் கிளரி

சக்கரை போட்டுத் தின்ன ரத்தபேதம் தீரும். பின்பு சுமையுருவி பாலையை அரைத்து எலுமிச்சங்காயளவு பசுவின் வெண்ணெயை அவ்வளவு ரண்டும் சேர காய்ச்சி எலுமிச்சங்காயளவு வெல்லமும் ஒரு காசிடை ஏலம் பொடி போட்டு கிண்டித் தின்ன ரத்தபேதம் தீரும். பத்தியம். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

சூதி வாய்வுக்கு:

பறங்கிப் பட்டை பலம் - 2, குரோசானி ஓமம் பலம் - கி, திப்பிலி பலம் - கி, திப்பிலிமூலம் பலம் - கி, சடாமாஞ்சி பலம் - 1, ஏலம் பலம் - கி, சிறுநாகப்பூ பலம் - கி, வாய்விளங்கம் பலம் - கி, ஓமம் பலம் - கி, சாதிக்காய் பலம் - கி, சாதிபத்திரி பலம் - கி, சித்திரமூல வேர்ப் பட்டை பலம் - கி, சதகுப்பை பலம் - கி, யாவையெல்லாம் கூட்டிச் சூரணம் பண்ணி தேனில் நெய்யால் [illegible] தீரும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும்,

அ. அதிசார கழிப்புக்கு கோட்ட தைல வாய்வுக்கு:

சுக்கு, சாதிக்காய், கிராம்பு, திப்பிலி, கிராம்பு, குரோசாணி ஓமம், விளாம்பிசின், சாதிபத்திரி, யாவும் சமன் கூட்டி தே கஞ்சா பலம் - 1, அவுணி (அபிணி) விரைகள் - 8, இவ்வகைச் சாக்கு கருவேலம் கொட்டு அரைக்கவும். சுண்டைக்காயளவு நிழலில் உலர்த்தவும்.

சாதிக்காய் நாலாய்க் கீறி அந்த கீற்றுக்குள்ளே அபினின் விரைகளை - 2, சோற்றில் வைத்து புடம் போட்டுக் கொடுக்க அதிசாரக் கழிச்சல் நிற்கும். பேரிச்சம் பழம், கிராம்பு - 6, அபிணி விரைகள் - 2, அதில் போட்டு ரயமாய்ப் போட்டு வேக பேரிச்சம்

பேரிச்சன் பழத்தை வைசாவ் கட்டி புடத்தில் போட்டு கிளிகி வாரத்தில் எருத்துக் குடிக்க கனிச்சல் கிரீடும். கை கண்டது.

தந்த வாயுக்கு:

கண்டாங் கத்திரி வேர், முள்ளி வேர், முக்கொவ்வட்டி வேர், சுக்கு, கடுக்காய், இது வகைக்கு விராகன் -2, இரண்டு படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி கஷாயம் வைத்து கொப்பளிக்க பல்வலி, தந்த வாயுவு தீரும். கை கண்டது.

7. நேத்திர வாயு, சிரோ வாயு, அஷ்டாதச தாரணம்!

மெகமெசக்கைச் சாறு படி-1, கையாந்தகரைச் சாறு படி-1, தூதுவளைச் சாறு படி-1, நல்லெண்ணெய் படி-1, பால் படி-1, மோரு படி-1, 1-ம் அமணி கிராம்பு விராகனெடை-1, அதிமதுரம் விராகனெடை-1, மிளகு விராகன் -5, பாலு பதத்தில் வடித்து முழுகவும் தீரும் வியாதி சிரோ வாயு, சிரோகம், மண்டையடி யாவும் வெல்லாம் தீரும். கை கண்டது.

அஷ்டாதிச் தாரணம்: மேற்படி

சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், கிராம்பு, சதகுப்பை, கருஞ்சீரகம், பெருங்காயம் யாவும் சமனாய் எடுத்து தூளம் பண்ணி வெருகடி பிரமாணம் ஒரு வேளை அன்னத்தில் போட்டு நெய் காய்ச்சி விட்டு பிசைந்து உண்டால் கோளம் குன்மம் கொள்ளவும் தீரும் வியாதி வயறு எரிந்து கழியாது, வயிற்று பொருமல், வயிற்றுவலி, வெள்ளைப்பூடு, யானைப்பு,

சோகை, நெஞ்சு எரிவு, புளித்தேப்பம் மந்தாக்கினி, மந்தம், யாதவையெல்லாம் தீரும். இது கை கண்டது.

அ. கொடி பவுத்திரத்துக்கு மருந்து.

நல்லெண்ணெய் படி - 4. தேங்காய்ப்பால் படி - 4, யாழ்ப்பாணத் தமிழ்ச் சாறு படி - 4, மூன்றும் ஒன்றாய்க் கூட்டி மூன்று நாள் இருக்கவும். யாதுக்கு பத்தியம் வெண்ணிலம், சோறும், புகை புளி தள்ளவும்.

அதிக்காய் விராகன் - 2, கிராம்பு விராகன் - 2, சாதிப்பத்திரி விராகனிடை - 2, அதிவிடையம் விராகனிடை - 2, கோரோசனை ஓமம், காசு கட்டி விராகன் 2, வாலாம்பிச்சின் விராகன் - 2, ஏலம் பசின் விராகனிடை, அவனி விராகனிடை - 2, அவனியும், காசுக் கட்டி வைத்துக் கொண்டு மற்ற மருந்தெல்லாம் சிவக்க வறுத்து கொண்டு பிறகு அவனியும், காசுக் கட்டியும் பொடி செய்து யாந்த மருந்தெல்லாம் பொடி செய்து பனையால் வடித்துக் கொண்டு வேண்டிய பிரமாணம் தேனில் கொள்ளவும். பெரும்பாடு, கசிக்கல், கிரணி யாவை தீரும்.

ம. பேய் நரி கடிக்கு மருந்து: ஓலை

அருகன் வேர் பிடி - 1, கருமத்தின் ... - 4, வெல்லம் - 1, சாட்டைப்பிடி, ஒரு யாவும் கலக்க காட்டி அரைத்து ஞாயிற்றுக்கிழமை நாள் இருக்கவும். வெள்ளி கிழமையன்று ஆற்றுமணலையால் வைத்து தீச்சு விடாமல் வாயால் குடம் தண்ணீர் சொரிந்து பாதி சாமம் சோறும் மோரும் இருக்கவும்.

யாதுக்குப் பத்தியம் நல்லெண்ணெய், கத்திரிக்காய், அதினை ரொம்ப மோசம் கிழங்கு வகைகள் இதுகள் தின்றால் மாசத்துக்கு ஆகாது. இது கைகண்டது.

மேல்தோல் வாய்வுக்கு எண்ணெய்வகை: வயது

நெல்லிக்காய்ச் சாறு படி—1, பொன்னாங்காணிச்சாறு படி—1, தூதுவளைச் சாறு படி—1, கையாந்தகரைச்சாறு படி—1, செவ்விள்ளி தண்ணி படி—1, பசுவின் பால் படி—1 இதுவெல்லாம் சமனாகத் தான் உலர்த்தி ஒரு புன்னை எண்ணெய் விட்டு காய்ச்சி மெழுகு பதமானால் யாக்கி முழுக்க தேய்த்தல் மேகம் வாதக் கண்ணையும் யாதுவெல்லாம் தீரும். யாதுக்கு

ஏலாதிச் சூரணம்:—

அமுக்கிராங்கிழங்கு, சொக்கத்தாரிப் பட்டை, சிறு குறிஞ்சான் வேர், சங்கம் வேர், சங்கம் குப்பா வேர், வெள்ளறுகு, யாந்த ஆறு வகையும் நிழலாத் உலர்த்தி வகையொன்று விராகனிடை—2 இதுவெல்லாம் இடித்து இந்தப் பொடி வஸ்திரகாயம் பண்ணி இதுக்கு கூட்ட கடைச்சரக்கு வகை,

லவங்கப் பட்டை விராகனிடை—2, லவங்கப்பத்திரி விராகனிடை—2, கோஷ்டம், கஸ்தூரி மஞ்சள், நில சந்தனமும், வாலம்பிச்சன் வேர், நல்ல சீரகம், கருஞ்சீரகம், சீதா செங்கணி இதுவெல்லாம் வகையொன்றுக்கு விராகனிடை—2 இந்த சரக்கு பசுவின் பாலல் விட்டு அரைத்து எண்ணெயால் கலந்து அடுப்பேற்றி துணாவிக் காய்ச்சி மெழுகு பதம் கூடும் போது இறக்கி வைத்து கொடுக்கி

பூசை பண்ணி அந்த எண்ணெயை வடித்துக் கொண்டு எட்டு நாளைக்கு இரண்டு தினம் முழுகவும். இதுக்கு தீரும் வியாதி. வரை

வெட்டைக்குச் சூரணம்!

அதிமதுரம் விராகனிடை இரண்டு, வாய்விளங்கம் விராகன் - 2, கொத்தமல்லி, நல்லசீரகம், ஏலரிசி, விராகன் கிச்சிலிப்பழம் விராகன் - 2, பேரீச்சம்பழம் விராகன் - ௨, யாவையெல்லாம் பொடித்துச் சூரணம் பண்ணி முன்னமே பொடித்து வைத்த சூரணம் யாவும் ஒரு சமனெடுத்து ஒரு பலம் சீனி சக்கரை கலந்து மூணு விரல் கொண்டு எடுத்து உள்ளங்கையில் வைத்து ஒரு உண்டை பசுவின் நெய் கலந்து சாப்பிடவும். தீரும் வியாதி உடலதி மீறி உள் வெட்டை, சீழ்பிரமேகம், ரத்தப்பிரமேகம், சிக்கல் பிரமேகம், பிரப்படி வெட்டை பதினெட்டு வகையும் தீரும். தேனில் சாப்பிட்டால் பசிக்கும். இது கைகண்டது.

அ. கண் சூரைக்கு குடிநீர் எண்ணெய் வகை:

திருவேலங் கொம்பு, புரசு, வெள்ளை வேலம்பூ, கொடிவேலி வேர் - 3 பிடி கைவளம் தறித்து முடா வியாவிட்டு ஒரு வள்ளம் தண்ணீர் விட்டு அடுப்பு ஏற்றி நாலொன்றாய்க் காய்ச்சி அதை வடித்துக் கொண்டு சிற்றாமணக்கெண்ணெய் ஒருபடி விட்டு கடைச்சரக்கு வகைக்கு கருக்காய் அஞ்சு, மஞ்சள் யாதுகள் அரைத்துப் பொடி செய்து எண்ணெயில்க் கலந்து அடுப்பில் வைத்துத் அளவு காய்ச்சி

வெதுப்பமானால் இறக்கிவைத்து ஒரு கலசத்தில் வைத்துக்
கொண்டு தினமும் ஒரு கரண்டி யெண்ணெய் ஏழுநாள்
குடிக்கவும். உப்பு, புளி தவிர பசுவின்மோர் வார்க்கவும்,
மோர்கிழங்கும் தவிர்க்கவும். கைகண்டது.

67 கிடக்கிரி வியாதிக்கு மருந்து:

பிடரி நோவு, மூக்கட்டுத் தாரை நோகும். முதுகெலும்பும்
நோகும். அடிவயிறு நோகும். இதுக்கு மருந்து.
சுக்கு, மிளகு, இந்துப்பு, கடுகுரோகணி, கடுகு
இதுவெல்லாம் சட்டியிலே போட்டு அடுப்பில் வைத்து
நன் வெதுப்பாய் வறுத்து இரண்டுபடி தண்ணீர் விட்டு
எட்டொன்றாய்க் குறுக்கி யாத்துக் இறக்கவும்,
இதுக்குக் கிரி வியாதி தீரும்.

இரசம் விருக்காட்ட மருந்து: நரம்புவலைக்கு!

எருக்கணைக் கற்றாழையும், நேர் வாசத்து பருத்தி
வேரும் இதுவெல்லாம் ஒரு சமனாகச் சேர்த்து அரை
மேசுக்கில் தவளையாட இருபத்தஞ்சு நாளிகைக்கு
உடம்பிலொக்கவும். இருபத்தெட்டு நாளிகைக்கு
குளிர்ந்தண்ணீர் பத்துக்குடம் விடவும். எந்த ரசம்
விழுகும். அதின் பிறகு ஏலாதிச் சூரணம் சாப்பிடவும்.
இருபது நாள் கொள்ளவும். வேளைச் சமூலம் கொண்டு
அ. வந்து ஒரு கட்டைப்பூடு ஒரு சமனாக வச்சுத் தட்டி
கிண்ணியாலே பொட்டணம் பிடிச்சு அந்திப் பொட்டணம்
சிசுகிளப்பித் துவைத்து இடது புறம் நொந்தால்
வலது பக்கம் புரியவும். வலது புறம் நொந்தால்
இடது பக்கம் புரியவும். நரம்புதலைவலி தீரும்.

நெஞ்சு தின்ன பெருக்கு:

கருநெய்தை சூத்திரம் ஒரு பழம் பிடித்து அதில் ஒரு சமுத்திரத்தில் பதினொரு நாணைக்கி உறைப்போட்டு அதுக்கும் பிறகு பழத்தை யெடுத்து நிழலாவுலர்த்தி அந்தக் கருநெய்தை சூத்திரம், உறைந்து பஸ்பமாகும். அதையெடுத்து குருக்கையால் அரைத்துக் கொண்டு சமுத்திராப் பழத்தை முன்போலால் ஒரு பணவெடை போட்டுக் கலக்கி நசியம் விடவும். எட்டுவதை நெஞ்சு தின்ன பெருக்கும், இருக்கு நோவுக்கும் நசியம். புதிய யார்ந்த நோவு தீரும். கை கண்டது.

௬. சகல தோஷத்துக்கும் நாசிகா பாணம்!

சகல தோஷத்துக்கும் இலைக்கள்ளி வேர் கொண்டுவந்து சுறுக்க நறுக்கி நிழலாவுலர்த்தி வெய்யாலில் ஒரு நாணைக்கி காயவைத்து அரவலாடித்து கெட்டியான சீலையால் வஸ்திரகாயம் பண்ணி ஒரு குருக்கையால் அரைத்துக் கொண்டு சகல தோஷத்துக்கும் இரண்டு நாசியாலும் ஒரு பணவெடை விட்டால் தும்மல் யெடுக்கும். சகல தோஷமும் தீரும். யாதி கை கண்டது.

தோஷம்

௮. நாவு தோஷத்துக்குத் திவ்வனை

ஒரு எலுமிச்சம் பழம் கொண்டுவந்து தோலிச்சு நாவு கீத்தாய் அரிஞ்சு அதில் ஒரு பணவெடை எருக்கம் பால் விட்டு ஒரு பணவெடை சுண்ணாம்பு தடவி நாவுத்தோஷம் உண்டானவர்களுக்கு நாக்கு முண்டாயிருக்கும். அவர்களுக்கு ஒரு கீத்தை எடுத்து நாவுக்குத் தடவி வாயடைத்துக் கொள்ளவும், நாவு தோஷம் தீரும். இதுகை கண்டது. தேகம் அடங்கும். காய்ச்சல் நிற்கும்.

தோஷம்

நீர்த்தலை வாதத்துக்கு மருந்து:-

விடத்தலை யாலை கொண்டு வந்து கம்பிசியால் ஆக்கிடும் இலையை அரிசியிலாக்கிடும், யாழத்துக் கிண்டி பசுவின் நெய்விட்டு நூறுநாள் தின்னவும், உப்பு, புளி தவிர்க்கவும். பின்னும் இலைக் கள்ளி கொண்டு வந்து விளக்கெண்ணெய் தடவி விளக்கு நெருப்பில் வாட்டிக் கட்டவும். நீர்த்தலை வாதம் தீரும். இது கண்டது.

69. நாளம் ரோகுக்கு மருந்து!

நெருஞ்சிலையை ஞாயிற்றுக் கிழமை நாள் வாய் பேசாமல் வலது கைக்கின்னாய் சுத்தி வந்து வெற்றிலை, தேங்காய், சாம்பிராணி தட்சணை வைத்துப் பிடுங்கி தலைக்கு மாலைப் போடவும். நாளம் மேல் நிற்கும்,

மூணாம் ரோகுக்கு:

ஞாயிற்றுக் கிழமை நாள் நாயுருவி யாலை வெரிச்சு அங்கே தான் ஒரு இலையைப் போட்டு விடவும். ஆசு இலையையும் வாய் பேசாமல் கொண்டு வந்து அம்மியால் அரைத்து ஆசு மிளகும் ஒரு கட்டை பூண்டும் அரைத்து மூணு உண்டை கொடுக்கவும் நிற்கும்.

அ. நஞ்சு ஏறினதுக்குப் பூரண செந்தூரம்:

ஒரு மிளகும் ஒரு தவளைப் பருப்பு யாதுரணம் அரைச்சு புளிச்ச தண்ணியால் கொடுக்கவும். நஞ்சு ஏறினதும் சிக்கிரம் தீரும். யாதுகை கண்டது.

பூரண செந்தூர மாத்திரை பண்ணுகை:

சாதிலிங்கம் விராகனிடை - 4, பொன்னரிதாரம் விராகன் - 4, இது இரண்டு வகையும் ஒரு மண் சட்டியில் போட்டு சம்பங்கியிலைச் சாறுவிட்டு மேலே ஒரு சட்டி கொண்டு மூடி மண்ணாடை வெள்ளாவியால் வேகுற தண்ணியில் வச்சுக் கிட்ட அதிலிருந்து தீயெரிச்சு விடுந்தின் ஒரு நாளைப் பார்க்கும் போது செந்தூரமாயிருக்கும். அதையெடுத்து அம்மியில் வைத்து எலுமிச்சங்காய் சாறுவிட்டு அரை மாத்திரை தேத்தவும். அந்த மாத்திரையை உரைச்சு வியாதிக்காரனுக்கு அனுபானம் முருங்கைப் பட்டைச் சாறு வெள்ளை வெங்காயத்துப் பாலும்
70. சுக்கு மிளகு யாதுவெல்லாம் பொடி பண்ணி அந்தச் சாறோடே பொடியும் பண்ணிப் போட்டு தேன்விட்டுச் சாரித்து மாத்திரை ஒரு பணவெடை உரைத்துக் கொடுக்கவும். சேத்துமம், எட்டுவகைத் தோஷமும் தீரும். பதிமூணு வகை காசம் மாறும்.

எரிகுன்ம வியாதிக்கு: எலுமிச்சம் பழச் சாற்றில் கொடுக்கவும். எரிகுன்மம் தீரும்.

பேச குழந்தைக்கு தைலம்:- பூசைக்

நல்ல பொரிம்பியானை, திருணித்துப் பச்சை, தோத்தி வேம்பு ஒரு கட்டைப்பூ, வசம்பு, விளாவிளை யாவற்றையும் வைத்து மையரைத்து சாறு பிழிஞ்சு நாக்கில் உச்சியால், நெஞ்சில் மேசைக்குத் தடவவும் யாடவும். வாடத்தனால் தண்ணீர் மூணு பிடி பொரிச்சு நெய்யடியால் ஒருபடி தண்ணீயைப் போடவும்.

நீயர்த்து உஷ்ட்டிண வெள்ளை எருப்புக்கு

மருந்து:

ஒரு பிடி தனைக்க கொண்டுவந்து மாங்கொட்டை புளியங் கொட்டை, மாத்திரம் வைத்துக்கொண்டு காசுக் கட்டி பாக்கிப் போலே வைத்துக் கொள்ளவும். இளந்த முருங்கைலே வச்சு அரைத்துக் கொடுக்கவும் சாவடித் தண்ணீர் விட்டு அரைத்து மூன்றுநாள் ஆறு வேளை கொடுக்கவும்.

51. வெட்டுக்கு ஒரு சித்தியாலம்!

கையாந்தகரைச் சாறு படி-1, நல்லெண்ணெய் படி-1 இந்த இரண்டும் கலக்கம் சிலிவேர், அஞ்சனக்கல், அதிமதுரம் வகைக்கு பலம்-42 அரைத்து எண்ணெயில் போட்டு பக்குவத்தில் வடித்துக் கொண்டு தலைக்கும், புண்ணுக்கும் தடவத் தீரும் வியாதி புகைவெட்டு, நகரு, சிரங்கு, தலைக்கிறக்கத்துக்கும் தடவ இனிமேல்.

கிருமிக்கு:

வேப்பமரத்து வேர் கொண்டுவந்து மேல்தோலையச் சீவிப் போட்டு நசுக்கி உலர்த்தினபொடி பலம்-1, அதுடனே அரப்பொடி கல்லுப்பு கட்டி பொடிசெய்து கலந்து முப்பது நாழிகைக்கு பழைய நாளைய அளந்து அந்தப் பொடியைப் போட்டு ஒரு நாள் வெயிலில் போட்டுக்கவும். உலர்ந்ததின் பிறகு தினம் மூன்று சித்தாய தின்னவும். யாதொரு தீரும் வியாதி புகை நாசியாமெல், மருந்தீடு, கிருமி யாதையும் தீரும்.

அ. கபால சன்னிக்கு நசியம்:

தும்பையிலை, புன்னாக்குமொட்டு, தைப்பூண்டு, வசம்பு, கற்பூரம் யாதவையெல்லாம் கூட்டி நசியம் விடவும். கபால சன்னி தீரும். யாது கை கண்டது.

கிராணிக்கு வச்சிரக் கபாடம்:

சாதிலிங்கம், சாதிபத்திரி, சாதிக்காய் வகையொன்றுக்கு வராகன்-1, கடல்நுரை வராகன்-2, இதுக்கு சமன் உமத்தன் சாற்றிலரைத்து மிளகுப் பிரமாணம் உண்டை பண்ணி வச்சுக் கொண்டு இரண்டு நேரமும் கொள்ளவும். சகல கிராணியும் அதிசாரமும் தீரும். இது கை கண்டது.

அசீரணத்துக்கு உண்டை (சூரியப்பிரவை உண்டை)

மஞ்சள் பலம்-௧, மரமஞ்சள் பலம், லவங்கம் பலம் ௧, கெந்தகம் பலம் ௧, சித்திர மூலம் பலம்-௧, செவியம் பலம்-௧, தேசாபுரம் பலம்-௧, ~~[illegible]~~ யாந்திப்பு பலம்-௧, கோஷ்டம் பலம்-௧, மேதாலகி பலம்-௧, கடுக்காய் பலம்-௧, சாரணை வேர் பலம்-௧, யவச்சாரம் பலம்-௧, முக்காவளை (முட்காவேளை) பலம்-௧, நாயுருவி வேர், கல்லுப்பு, பெருங்காயம் பலம்-௧, ஓமம் பலம்-௧, சீரகம் பலம்-௧, மாவிலங்கன் பட்டை யாதவையெல்லாம் சூரணம் பண்ணி வெள்ளாட்டு மூத்திரத்தில் நாரத்தம் பழச்சாற்றில் நாழிசாமம் அரைத்து கடலைப் பிரமாணம் உண்டை பண்ணி திரிக்கவும், கிசாயத்தில் ஒரு குளிகை கொடுக்கவும். அசீரணம் தீரும்.

ஓமத்த சாதிக்காய் சூரணத்துடன் இரண்டு குளிகை கொடுக்க. அதிசாரம் தீரும். விஷகிராந்திக்கு கஷாயத்துடன் கொடுக்கவும். சுரங்கள் தீரும். நாலு குளிகை கொடுக்க விஷக் தீரும். ஒரு குளிகை எருமைப் பாலில் தடவ தேள்விஷம் தீரும். பார்த்து கை கண்டது.

சாரம்

அஸ்த்தி சாரத்துக்கு:

சித்தாமுட்டி வேரை, பருத்தி விதை, இரண்டு படி குருவையரிசியைப் போட்டு இடித்து புட்டவித்து வெல்லம் போட்டு நல்லெண்ணெய் வார்த்து தின்னவும். அஸ்திசாரம் தீரும். பார்த்து கை கண்டது.

கிராணிக்கு!

சாதிலிங்கம், அபினி, கெந்தகம், வெண்காரம், திரிகடுகு, மனைதாளகி, சித்திரமூலம், மாவிலங்கப் பட்டை, சுத்தி பண்ணின கருமத்தை விரை, இதுவகைக்கு வராகன் -1, பாது அமன் கஞ்சாப் பொடி கூட்ட எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு சாமம் மர்த்திச்சு மிளகு பிரமாணம் உண்டை பண்ணி அனுபான விசேஷத்தில் கொடுக்க ரக்தக்கிராணி அதிசாரம் தீரும்.

நெஞ்சு வலிக்கு!

மாவிலங்கத் தழையை பாய்த்து வதக்கி பொட்டணம் கட்டி ஒத்தடம் தீரும். வெருகிழங்கு ரத்தக்க வாழைப் பழத்தை தளை பண்ணி அதில் தட்டுடன் சீரகம் வைத்து கிளைமண் செய்து புடம் போட்டுக் ~~கக்கரையகலக்~~ காலையிலக் கொடுக்கவும். வெகு சுத்திரம் தீரும்.

73. புளியங்காய் கற்பம், வல்லாரை கற்பம்!

புளியந் துளிர், கத்தாழைச் சாற்றில் புளியங்கொட்டை யால் அரை — சட்டத்தின் இருமல் தீரும். தேரையால் கொள்ள பாண்டு, காமாலை தீரும். திரிகடுகத்துடன் தேனில் கொள்ள எல்லா ரோகமும் தீரும். பின்னை கையால் கட்ட சகல பிணியும் தீரும். ஞாயிற்றுக் கிழமை காலை வல்லாரை இலை கொண்டுவந்து பொடிபண்ணி காடியால் மண்டலம் கொள்ள சகல ரோகமும் தீரும். அறுபது வருஷத்து ஆள் கொள்ள நரையாது. பசுவின் பாலில் கொள்ள புத்தியுண்டாம். எண்பதுநாள் சகல சன்னியும் தீரும். (1/2) இ வராகனிடை வாழைத்தண்டில் நீரில் கொள்ள நீர் நாள் மாறலத் தீரும். வெந்நீரில் கொள்ள காமாலை தீரும். பசுவின் வெண்ணெயில் கொள்ள வீரிய விர்த்தியை உண்டாம். இளநீரில் கொள்ள குளிர் காய்ச்சல் தீரும். சித்தாமணக்கு எண்ணெயில் கொள்ள மகோதரம், பாண்டு ரோகம், தீரும். வாழைக்கிழங்கு கியாழத்தில் இந்தப் பொடி தாவிக் கொள்ள சூலரோகம் தீரும். விசம்பு பொடியுடன் கொள்ள புத்திரனுண்டாம். கையாந்தகரைச் சாற்றில் கொள்ள புத்திரனுண்டாம். விரணங்கள் தீரும். நீருடன் குடிக்க பாண்டு வாயும் தீரும். பேய்ப்புடல் கியாழத்தில் கொள்ள விரியன் கடி தீரும். இந்தப் பூவை சத்தில், வாழைக்கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, பேரீச்சம் பழம், முந்திரிப்பழம், வாழைப் பழம் அரைத்து உப்பால் கலந்து சக்கரை போட்டு குடிக்கத் தீரும். மை எண்டத்

74. வெகுமூத்திரத்துக்கு நீரடைப்புக்கு, பெரும்பாடு நக்குழி, சூடு கிண்டன், நீர்ச்சிவு மருந்து சூரணம்:

நீரடைப்பு பெரும்பாடு குமரகண்ட நீர்ச்சிவு மருந்து சூரணம்:

அதிமதுரம், நெரிஞ்சி முள்ளு, ஆனை நெருஞ்சி, முள்ளு, செப்பு நெருஞ்சி வேர், சீந்திக் கண்டு, கோரைக் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, பேராமுட்டி வேர், நல்ல சந்தனம், மரமஞ்சள், பொன்னாங்காணி, சிறுக்கீரை வேர், பிரமி நீர், முள்ளி விரை, வெள்ளரி விரை, நெல்லி வத்தல், ஏலம், சீரகம், சதகுப்பை, திற்கோலம், மிளகு, கொத்தமல்லி, கோஷ்டம், முந்திரிப் பழம், இவை சமன் காட்டுச் சூரணம் பண்ணி எல்லாத்துக்கும் சமன் சக்கரை கலந்து வெருகடி கழஞ்சில் நெய், தேன், பாலில் தின்ன சகல பித்தமும், உஷ்ணமும், குமரகண்டன், நீரடைப்பு, நீர்ச்சிவு இதெல்லாம் தீரும். அண்ட வாதத்துக்கு கருதும்பை வேர் பாக்குடன் சேர்த்து மென்று ~~தின்னவும்~~.

அ. பிள்ளைகள் உபிசம், காச சுவாச சுரம், அத்தி எருக்கிறதுக் சூரணம்:

கற்கடக சிங்கி, திப்பிலி, அதிவிடயம் இது சமன் கட்டு சூரணஞ் செய்து தேனில் குடுக்க வெள்ளைப்பூ தேனில் குடுக்கவும். இதுவும் கடுகு ரோகணி சூரணம் பண்ணி மூன்று பணவிடை முலைப்பாலில் கொடுக்க சுவாச காசம் தீரும். வாந்தி சுரமுந் தீரும். இது கை கண்டது.

75. ## வெட்டைக்கிச் சூரணம்,

ப[illegible]கிப் பட்டை பலம்-1, அமுக்கிராக்கிழங்கு விராகன் மூன்று, அதிமதுரம் விராகன்-3, திப்பிலி மிளகு, சுக்கு, கொடிவேலி வேர் விராகன்-3, சாதிபத்திரி விராகன்-3, செவியம் விராகன்-3, சிறு தேக்கு விராகன்-3, நெல்லிப் பருப்பு விராகன்-3, தாணிக்காய் விராகன்-3, கடுக்காய் விராகன்-3, சாதிக்காய் விராகன்-3, கிராம்பு விராகன்-3, சித்தரத்தை விராகன்-3, வாய்விளாங்கம் விராகன்-3, கோஷ்டம் விராகனிடை மூன்று, குரோசாணி ஓமம் விராகன்-3, சடாமாஞ்சி விராகன்-3, திப்பிலி விராகன்-3, நற்சீரகம் விராகன்-3, வெட்டிவேர் விராகன்-3, நன்னாரி வேர் விராகன்-3, நிலப்பனைக் கிழங்கு விராகன்-3, இதையெல்லாம் கூட்டிச் சூரணம் பண்ணி தேனில் இரண்டு நேரமும் கொள்ள இதற்கு தீரும் வியாதி கிரந்தி நோய், மந்த வாய்வு, ஆசீரணம், வாத பித்தம், குட்ட மேகம், இதையெல்லாம் தீரும். இதுக்கு பத்தியம். அரசாணிக்காய் ஆகாது. இது கை கண்டது.

அரையாப்புக்கு!

வேலிப் பருத்தி வேர், கல்லுப்பு, எலுமிச்சம் பழச்சாறு வார்த்து அரைத்துப் பூசவும். வென்னீரில் கழுவவும். அரையாப்பு தீரும். யாது கை கண்டது.

பல் வலிக்கு!

வெள்ளருகு, மிளகு, உப்பு, சுண்ணம் கியாழத்தில் வைத்து கொப்பளிக்கத் தீரும்.

பித்தப் பிணிக்கு! - நற்சீரகம், கருஞ்சீரகம், செஞ்சந்தனம், கடுக்காய், வெட்பாலை கொழுந்து, அசமதம், திப்பிலி, சுண்டை, மிளகு, கல்நார், இந்த மருந்தெல்லாம் கூட்டி நொச்சிலைச்சாறு விட்டரைத்து குன்றிமணிப் பிரமாணம் உண்டை பண்ணி நிழலில் உலர்த்தி ஒரு உண்டை கொடுக்க சகல பிணியும் தீரும். சகல தோஷமும் தீரும். ~~கபால சன்னி, உள்வலிப்பு, புறவலிப்பு~~ கபால சன்னி, உள்வலிப்பு, புறவலிப்பு

இசிக்குத் தைலம்!

வசம்பு பலம் - 4, திப்பிலி வராகன் - 1, கடுகு பலம் - 1, கடுகுரோகணி பலம் - 1, கோழி முட்டைத் தைலம் படி - 1, யாவும் இந்த கடைமருந்தெல்லாம் பொடித்து தாம் பண்ணி எண்ணெயை காய வைத்து அதில் தைலத்தை விட்டு நன்றாய்க் காய்ச்சி இறக்கி வைக்கும் போது சாதிப்பத்திரி வராகன் - 1, போட்டு இறக்கவும். ஒரு காசெடை உள்ளுக்குக் கொடுக்கவும். மேலுக்குத் ~~தடவவும்~~ வாளை யாடவும். இசிக்கு தீரும். ஜெயசூர்ய சன்னி, விசி வாதம், கபால சன்னி, உள்வலிப்பு, புறவலிப்பு, மொறுமல், கைகால் நரம்பு வாங்குதல், இளைப்பு இந்த வகை

சன்னி தீரும். கை கண்டது. பிள்ளைகளுக்கு மாந்தம், வயறூதல், பொருமல், இதுக்குச் சூரணம்:-

இந்துப்பு, கடுகு, சிறு தேக்கு, ஏலம், பெருங் காயம், இது சமன் இந்துப்பும், பெருங்காயமும் வறுத்துக் கொள்ளவும். இதுவெல்லாம் சூரணம் பண்ணி இதுக்கு சமன் சக்கரை கூட்டி ஒரு பணவெடையாவது இரண்டு பணவெடையாவது பிள்ளை திறமறிந்து முலைப்பாலிலாவது வெண்ணெயிலாவது கொடுக்கச் சொன்ன வியாதி தீரும்.

பிள்ளைகளுக்குச் சுர மாத்திரை:

சீதா செங்கண்ணிச் சாத்தில் கருகு ரோகணி யை அரைத்துக் கடலைப் பிரமாணம் உண்டை பண்ணி முலைப்பாலிலாவது, தேன் வெண்ணெயிலாவது ஒரு குளிகை கொடுக்கத் தாகம் தீரும்.

அரசங் கொழுந்து கியாழம் வைத்து முலைப்பாலும் கூட்டி மாத்திரை கூட்டி கொடுக்கவும். இதுக்கு பிள்ளை சுரம் தீரும்.

கசாயம்:

சீந்தில் கொடி கிழங்கும் சீதா செங்கண்ணிச் சாறு, நல்லெண்ணெயும் சமனாய்க் கூட்டி கருகு ரோகணியை எண்ணெய்க்கி நாலிலொரு பங்கு கூட்டி சாவிட்டரைத்து பதத்தில் வடித்து பழைய காய்ச்சலும், உட்காய்ச்சலும், வாளை சுரமும் போகும். இது கை கண்டது.

இருமலுக்கு:

கெந்தகம் சுத்தி பண்ணி தேனில் கொள்ள இருமல் தீரும். இது கை கண்டது.

சாதிலிங்கம், பச்சை. கற்பூரம், திப்பிலி சுக்கு, மிளகு, வெங்காரம், கெந்தகம் இதுவெல்லாம் சமன் கொண்டு எலுமிச்சன் பழச்சாற்றிலரைத்து குன்றிப் பிரமாணம் உண்டை பண்ணி கொண்டு சக்கரையில் ஒருண்டை கொடுக்க சுரம் தீரும்.

இருமலுக்கு மயிலிறகு, கடுக்காய், பழம்புளி, மூன்றுஞ் சுட்டுத் தேனில் குழப்பிக் கொடுக்க விக்கல் தீரும்.

விக்கல் வாந்திக்கு மருந்து:

கருங்கம்பளி மயிலிறகு சுட்டு விளக்கெண்ணையில் குழைப்ப நாக்கில் இரண்டுதரம் மூன்று தரம் யிட்டு வழிக்க வெந்நீர் கொப்பளிக்கவும். இப்படிக்கு நேரத்துக்கு நேரம் அஞ்சு நாழிகைக்கு ஒருதரம் தடவ வாந்தி நிற்கும். விக்கல் நிற்கும். கைகண்டது.

விக்கல் வாந்திக்கு திப்பிலி வராகன் - ௫, பெருங்காயம் - 3, சட்டியில் இவைக்க வறுத்துப் பொடணம் பண்ணி யதை ராத்திரி திரிச்சு புகை பிடிக்க விக்கல் நிற்கும். உள்ளுக்கு கொடுக்க, வெள்ளைச் சீலையால் நல்ல சீரகம் சுற்றுப் போட்டு உருண்டைச் சுட்டு தண்ணீர் கரைத்து மூன்று தரம் உள்ளுக்குக் கொடுக்க வாந்தி விக்கல் நிற்கும்.

வீரிய விர்த்தினை, வெள்ளை விழுகிறதுக்கு:

நெல்பொரி விராகன் - 2, திப்பிலி வராகன் - 1, படல்கட்டின பருத்திமார் சுட்ட சாம்பல் விராகன் - 2 கலிக்கண்டு விராகனிடை இரண்டு இதுவெல்லாம் நன்றாயரைத்து கருக்க அக்காய் மெழுவாகி உண்டை பண்ணி வாயிலடக்க. விக்கல் நிற்கும்.

வீரிய விர்த்திக்கு மருந்து:-

சிறு செருப்படி இலை கொண்டு வந்து தவிச்சக் காயவிட்டு பிழிஞ்சு கொண்டு விளக் கெண்ணை திட்டமா விட்டுக் குடிக்கவும். வெதியாமம். இதற்கு மாத்து மோரும் சோறும் உண்ணவும். அதின் பிறகு மருந்து சாப்பிடவும். அதின் பிறகு சிறு செருப்படி கொண்டு வந்து நிழலுலர்த்தி சூரணம் பண்ணி நாட்டிலைவரு பாகு சிவனார் வேம்பு கூட்டி சூரணம் பண்ணி இதுக்குப் பாதி சீனிச்சக்கரை கூட்டி வெருகடிப் பிரமாணம் கொள்ள வீரிய விர்த்தியுண்டாகும் சரீரம் புஷ்டி ஆகும். கை கண்டது.

வெள்ளை விழுகிறது புளிகாய் கொழுந்து, வெள்ளைப் பூண்டு, திப்பிலி, பெருங்காயம், மிளகு, இதுவெல்லாம் அரைத்துத் தின்னவும். வெள்ளை நிற்கும். பின்னும் அமுக்கிராயலை யொன்று கொண்டுவந்து கசக்கி அதில் வந்த சாறு, எருமைத்தயிர் பிடியாது கலந்து குடிக்கவும். இப்படி மூணு நாள் குடிக்கவும். இது பத்தியம் புளிதவிர திரிகாரி மேலே புல்லுரியைக் கொண்டுவந்து வேகவைத்துச்

சுட்டு பொசுக்கி கக்கத்தின் மேல் வைத்துக்கட்ட முழங்கால் கட்டிகள் வீக்கம் தீரும்.

முழங்கால் வீக்கத்துக்கு கண்டங்கத்திரி கிருதம்

கண்டங்கத்திரிச் சமூலம் இடித்த சாறுபடி நாலு, நெய் படி இரண்டு, சாரணைவேர், சிறுகாஞ்சொறி, தாளிசபத்திரி, கடுக்காய் நெல்லி, சிறுதேக்கு, அரத்தை, நெரிஞ்சி ~~வேர்~~, கார்போக அரிசி வகைக்கு விராகன்-4 அரைத்து நெய்யில் காய்ச்சி தினமொரு கரண்டி நெய் உள்ளுக்குக் கொள்ளவும். இது தீரும் வியாதி நாவறட்சி, உள்காய்ச்சல், அஸ்திசுரம், தாகம், மேகவெட்டை, கால் உடம்பெரிச்சல் யாதுவெல்லாம் தீரும்.

இருமலுக்கு:

பொடுதலை கொண்டுவந்து சுக்கு விராகன்-2, மிளகு விராகன் இரண்டு, திப்பிலி விராகன்-2, அரத்தை விராகன்-2, கருப்புக்கட்டி பலம்-1, கடுக்காய், பசுவின் நெய் படி-1 யாதுவெல்லாம் லேகியம் பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு நேரமும் கழற்சிக்காய் பிரமாணம் கொடுக்கவும். இருமல், சயம், காசம், இளைப்பு, யாவையெல்லாம் தீரும்.


கடுக்காய் பலம்-3, பசுவின் கோமியத்தில் ஊறப்போட்டு அதின் பிறகு எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று (ஒன்று) நாள் ஊறப்போட்டு மறுநாள் வெய்யிலிலே காயப்போட்டு பொடித்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொள்ளவும். காசம். இருமல் இதுவெல்லாம் தீரும்.

PTO

அரிதாரம் கழஞ்சு - 50, பூசணிக்காய் சாற்றில்
துளா
~~கொ~~யந்திரமாக கட்டி வேக வைத்துக் கொண்டு
பிசிறி அலசி பிழிந்துக் கொண்டு அந்த நீரை
விட்டு ஒரு சாமம் அரைக்கவும். குப்பை மேனிச்
சார் விட்டு ஒரு சாமம் அரைக்கவும். கஞ்சாவைச்
சாறு விட்டு ஒரு சாமம் அரைக்கவும். அதின் பிறகு
ஒரு சட்டியால் உப்பு படி-1, கஞ்சாவைத் தண்டு
தேங்காய்ப் பிரமாணம் அரைத்து முன் சொன்ன
மேற்கோடை பிசிறி உப்பு மேலே வைத்து அதை
மேலே அரிதாரம் அடைத்து வைத்து அதின் மேலே
அரசன் பட்டையும், கஞ்சாவையும் அரைத்து
சுற்றி
மூடி ஆப்பாட்டு ~~சுற்றி~~ தண்ணீர் தெளித்து ஒரு சட்டி
கொண்டு மூடி சட்டி வாய்க் கிண்ணிச் சீலைமண்
செய்து அடுப்பில் வைத்து பனிரண்டு சாமம் அரைக்க
வும். ஆறவிட்டு சட்டியால் உப்பைக் கிளைக்கிப்
போட்டு பற்பத்தை எடுத்துக் கொண்டு முன் மீந்த
புளியஞ் சாம்பல் அந்த உப்புடனே கலந்து
வைக்கவும். அந்த பற்பத்துக்கு அநுபானம் அரைப்
பணவெடை பற்பம் கருப்புக் கட்டியால் வைத்து
இரண்டு வேளையும் இருபது நாள் கொள்ள தீரும்
வியாதி கழல் தலை, கரப்பு, புண்கள் பதினெட்டு,
வாய்வு இருபத்தாறு, மண்டை நோயும்,
தொண்டைக்குள் புண்ணும், தொண்டைக்குள்
புற்றும், கண்டமாலை, விப்புருதி, அரையாப்பு,
தொடை வாழை, பவுத்திரம் இருபது, கிரந்தியும்,
மேகப் புண்ணும் தீரும். யாதில் அரை பணவெடை
யும்

இந்தக் கருக்கு அனைத்தும் பொடிசெய்து தேனில் குழைத்து இரண்டு நேரம் நாற்பது நாள் கொள்ள ஈளை இருமல், ~~[illegible]~~ வெளிக்கடி, மந்தார காசம், சுவாசகாசம், இளைப்பு, சத்திகுன்மம், வாதகுன்மம், எரிகுன்மம், பிரமேகம் இருபது தீரும். மற்றும் உண்டான வியாதியும் தீரும். அரைப்பணவெடை பற்பமும், புலிக்கண் பட்டை, வேப்பன் பட்டை இரண்டும் கியாழம் வைத்து அந்த கியாழத்தில் இரண்டு காசிடை தேன் விட்டு இரண்டு நேரம் நாற்பது நாள் கொள்ள குட்டம் பதினெட்டு. வெள்ளை குட்டம், கரிகுட்டம், குறைநோய், பெருநோயும், சிரங்கு, சொறி, படர்தாமரை, வண்டுகடி, விஷபாகம், கானாக்கடி, சிறுபாம்புக் கடி, செய்யான்கடி, பூரான்கடி சகல விஷமும் அரைகடி வெள்ளை வந்த ரோகமும், கருப்பாசக்கரைச் சூலைகளும் தீரும். பார்த்து கைகண்டது.

செப்பான தாம்பூரம் தேமுக்க தாக
செவ்வீரம் மனோசிலையுமே கெந்திப் பூடு
கண்பூரம் பழச்சாறு உருவாச் சாறு
கலந்துவெண்ணெய் வெயிலிலே கலந்து வைத்து
வெண்பூரம் ஆரியனால் மேனிக் மாச்சு
மேலான சயித்தியமே வியாதிக் கெல்லாம்
பண்பூரம் பணவெடைதான் தேனிற் கொள்ள
பத்திகின்ற காசமெல்லாம் மென்று போமே//.



பாக்குடைய விஷபாகம் பாண்டு ரோகம்
பண்டுவரும் தொண்ணூற்றி ஆறு காசம்
மாக்குடைய வாதபித்த சிலேத்து மங்கள்
விந்தபிணி மேகமெல்லாம் மேயன் பாதம்
அரக்குடைய அறுபத்து நாலு கோடி
அஷ்டவிதி உள்ளமட்டு அசையாக்கட்டை
இருக்குடைய பூலோகம் ர.சன் கரணை
இடையாவொருத்த தருமண்டோ நயஷ்த்தைப்
பாரு//

81. குதிரை ஓட்டத்துக்கு:

பாஷாணத்தில் முளைத்த ஆவாரைக்கித் தாபகீபால் கொடுத்துப் பிடுங்கி கிளிசமாடி தைக்க சகல பிசாசம் ஆகும். ஓடிப்போம். விடத்தரை மூலிகையும் அப்படியே செய்வித்துக் கொள்ளவும். ஆதமூலிகை அறுபத்திநாலும் வகைப்படி செய்யவும். பாவட்டை விரை கொண்டுவந்து தாபகீபால் கொடுத்துத் தானுமக்கு இரண்டு விரை போட்டுக் கொண்டு குதிரைக்கும் நாலு விரை கொடுக்கவும். நெல்லிப்பழம் வெள்ளாட்டுப் பாலில் உரைப்போட்டு மூன்று

நாளைக்கிப் பிறகு தாபம் கொடுத்து எடுத்து வைத்துக் கொண்டு ஒரு விரையை பல்லில் தானே வெதிர்ந்து கடிக்கவும். அம்பு, கிளியும், பகையாளியானவன் பயப்படுகிறதுக்கு. பாப்பரமுள்ளிக்கு மூணு நாள் காப்புக் கட்டி சதுர்த்தேசியான்று காப்புடன் சூரியுதையத்துக்கு முன்னே அந்த வேர் கொண்டுவந்து குளிசை கட்டிக் கொள்ளவும். பயப்படுவான். சூனியத்துக்கு திருமெதுண்டன் வேர் தாப் தீபம் கொடுத்து குளிசை கட்டிக் கொள்ள சூனியம் முறியும். பசுப்பிலைப் கள்ளி வேர் பிழுகி வேரை நாக்கிச் கொண்டு சாதி சந்தனத்துடன் அந்த வேரைக் கடு—— அரைத்து தனக்கு வேணுமென்ற அவ்வு பார்த்து அவள் மார்பிலும், கழுத்து மேலும் பூசிவர அவளைக் காணாமலிருந்தால் தலைவலியெடுக்கும். மாத்து.. பருமஞ்சள் பட்டுக குளிக்க மாத்து. வெள்ளைக் காக்கணை வேர் அரைத்துத் தன்றுடம்பில் பூசிக் கொண்டு போய் வேண்டுவ அவளை கட்டி அணையப் பிறரை வேண்டாம்.

82. தலையடி, கண்சிவப்பு, காச்சல், மேல்ச் சூடுக்கு

எண்ணெய்:

விளம்பவே யின்னமொரு எண்ணெய் சொல்வேன்
மெய்நயன இடிபுகைச்சல் சிகப்புத் தீர
தளம்பவே கண்டறியும் தாது வேளை
தன்மையுடன் வகைவகைக்கிப் படிச்சார் வாயிலி
திழம்பவே சலகம் வேர் கசாயம் நாழி
இணையான நல்லெண்ணெய் நாழி விட்டு
விளம்பவே தீர்கவ்கை சொல்லக் கேளு
பாலு மிளகு சடாமஞ்சி வெட்டி வேரே

வேரோடு விளாமிச்சன் முத்தக் காசு
விதமான சாதிக்காய் கிராம்பு சோம்பு
சீரோடு அகில்கட்டை தேவ தாரம்
சிறந்தேலம் பூச்சாந்து பச்சை பூலான்
நீரோடு சிறுநாகம் லவங்கப் பட்டை
நிறைந்த கஸ்தூரி மஞ்சள் அறுகை கோட்டம்
காரோடே வகைவகைக்கி அட்டுபடைதான் தூக்கி
காடிதண்ணி தனிலரைத்துக் காய்ச்சிப் போடே//

அ. போட்டபின்பு எண்ணெயது வடிக்கும் போது
குங்குமப்பூ கோரோசனை விராகன் ரெண்டே
நாட்டவே கஸ்தூரி பணவிடைதான் ஒன்று
நலமாக வடிக்கலசந் தன்னில் போட்டு
தேட்டமுடன் கணபதிக்கி பூசை செய்து
தெளிவாக யெண்ணெய்தனை முழுகும் ~~போது~~ மென்று
விட்டமின்றி நெய்த்தமில்லா மிளகு காடி
குணமான அறுகன்வேர் கசாயம் கொள்ளே/

கொள்ளவே சூலநோய் தீரு விக்கல்
குறுகுறைப்பு கண்புகைச்சல் குணமதாக
தள்ளவே பெண்போக மேகா தீபன
சாதகமாய் தன்மையமாய் பாருப்பா யானால்
நள்ளவே வியாதியெல்லாம் நசிக்க வென்றோ
நயந்துமைக்கி அரன்சொல்ல நான் சொன்னேனே//
செம்பிளாவுக காகைமுறை திரிக ரகி
கலாங்கி சேமம் கொத்த மல்லாகை

கடர்வாய் விளங்கம் ஓமம் செவியம்
உயர்கருஞ் சீரகம் யிரஞ்சு பத்து
இனியதொரு பலமாய் பரலகிப்பட்டை
பலமோர் பத்து சோராய் கொட்டை பலமொரொன்று
சேர்க்கு மிளகு யோக்கி குழந்தன் மடித்து கிள்ளியே
வைந்தபின் னைருத்துவிரை சாணை தன்னில்
புளிக்கிப புறப்பாலை சாற்றில் +
புளிக்கிப பன்னிரு வகையும்
பாகுடா — னைந்து கொப்பரைத் தேங்காய்
கா —— வே சேர்த்து
பனையோர் வெல்லம் பலமொரு பத்து
ஒரு சேர்த்து ஒக்கப் பாசைந்து இரண்டுநேரம்
நெல்லிக்காயளவு மண்டலம் கொள்ள மேனி
யாகக் கேளு,
தலைவில் கறுப்பு கைகால் கறுப்பு
மேனியில் தழுப்பு வெடிதுளைப் புண்கள்
யானைப்புத்து → தொந்த தொருமேகமும்
தாவிய நோய்கள் தலைகெட் டோடிடும்
சுவாசபயாத்திரிய ரோகங்கள் பல்கலந்து
பண்டிகை பகைத்து பவித்திர ரோகமும்
அடக்க மைத்த அசீரண வாய்வு
கண்ட துலை கழவாசை முதல்
உண்ட புண்டனே ஒருநொடி நோய்தீரும்
பத்திய மேதெனில் கரப்பான் பண்டம்
கையிலாத் தொடாமல் இருப்பா ரானால்
என்னைக்கும் திரேகம் வைவ்வர மேதே

84. புஷ்டிமக்கி:

அபினி, குங்குமப்பூ, மிளகு, சாதிக்காய், சாதிபத்திரி, ருமஸ்த்து, முந்திரிப்பழம், பூனைக் காலி விதை, நிலப்பனைக் கிழங்கு, வெண்காரம், கஸ்த்தூரி, கிராம்பு, வகைக்கு ஒர் பணம் - உ தேன் விட்டரைத்து

[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]

அ	இவ	உதி	எம	ஒம

இக்கணம் வரை, மொழிநடை சரிபார்த்து; புத்தகத்தை
ஒப்புதலுடன் அச்சுக்கு வழங்கலாம்

[illegible]
27/4/98
[illegible] தலைவர்